ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1655/5 - 2010 මැයි 24 වැනි සඳුදා - 2010.05.24
*1655/5 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் குருநாகல் மாநகர சபையின் பிரதி மா நகர முதல்வர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்டதன் காரணமாக குருநாகல் மாநகர சபையின் பிரதி மாநகர முதல்வரின் பதவி வெற்றிட மாகியிருக்கின்றதாதலாலும் ;

குருநாகல் மாநகர சபையின் பிரதி மாநகர முதல்வர், அபேசிங்ஹ அஷோக் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர், அத்தகைய கட்சியைச் சேர்ந்தவரும் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் பிரதி மாநகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக வெளிப்படுத்தப்படவேண்டியவருமான குருநாகல் மா நகர சபையின் உறுப்பினரைத் தீர்மானிக்குமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 65 அ(1) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே சொல்லப்பட்டதான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ், தகுதியுள்ள ஆளொருவராக திரு. அனுராத காமினி பெரமுணகே என்பவரை பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;

இப்போது குருநாகல் மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ஆர். எம். ஏ. எல். ரத்னாயக ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. அனுராத காமினி பெரமுணகே என்பவர், குருநாகல் மாநகர சபையின் பிரதி மாநகர முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஆர். எம். ஏ. எல். ரத்னாயக,
தெரிவத்தாட்சி அலுவலர்,
குருநாகல் மாநகர சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
குருநாகல் மாவட்டம்,
2010, மே 18.

*6 - 152*

## (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் கல்முனை மாநகர சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

*கட்சியின் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ளதன் காரணமாக கல்முனை மாநகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி வெற்றிட மாகியிருக்கின்றதாதலாலும் ;*

*2007 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட 65அ (2) ஆம் பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு ஆதம்பாவா சாக்கீர் ஹுசைன் என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப் பட்ட அரசியற் கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் கல்முனை மாநகர சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரை பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65 அ(2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட் டுள்ளாராதலாலும் ;*

*மேலே சொல்லப்பட்டதான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ், தகுதியுள்ள ஆளொருவராக திரு. ஆதம்பாவா ஜலால்தீன் என்பவரை பெயர் குறித்து நியமித்துள்ளா ராதலாலும் ;*

*இப்போது கல்முனை மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் எம். எம். எஸ். கே. பண்டார மாபா ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. ஆதம்பாவா ஜலால்தீன் என்பவர், கல்முனை மாநகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*எம். எம். எஸ். கே. பண்டார மாபா,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*கல்முனை மாநகர சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*அம்பாறை,*
*2010, மே 13.*

*6 - 153*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*